# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

## 2009 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, பாஹியங்கல பாதுகாப்பு மற்றும் அபிவிருத்தி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம்

---

*(2009 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 20 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2009, ஏப்பிறல் மாதம் 24 ஆந் தேதிய* ***இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்*** II *ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது*

*கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்*

***விலை : ரூபா 10.00*** ***தபாற் செலவு : ரூபா 5.00***

## 2009 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, பாஹியங்கல பாதுகாப்பு மற்றும் அபிவிருத்தி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம்

[2009 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 20 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]

ச.வ.ஓ. (கூட்.) 22/2007

## பாஹியங்கல பாதுகாப்பு மற்றும் அபிவிருத்தி மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

" பாஹியங்கல பாதுகாப்பு மற்றும் அபிவிருத்தி மன்றம்" என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான மன்றமொன்று அதன் உறுப்பினர்களால் இணங்கிக்கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்கச் சொல்லப்பட்ட மன்றத்துடன் தொடர்புபட்ட எல்லாக் குறிக்கோள் களையும் கருமங்களையும் பயனுற நிறைவேற்றிக் கொண்டு நடாத்தும் நோக்கத்துக்காக இதற்கு முன்னர் தாபிக்கப்பட்டுள்ள தாதலாலும் : முன்னுரை.

அத்துடன் சொல்லப்பட்ட மன்றமானது எப்பல்வேறு குறிக் கோள்களுக்காகவும் கருமங்களுக்காகவும் உருவாக்கப்பட்டதோ அப்பல்வேறு குறிக்கோள்களையும் கருமங்களையும் இதுவரை வெற்றிகரமாக நிறைவேற்றியும் கொண்டுநடாத்தியும் வந்துள்ள தாதலாலும், அது கூட்டிணைக்கப்பட விண்ணப்பித்துள்ளதாத லாலும் அவ்விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்களின் நன்மைக்காக இருக்குமாதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாக :-

**1.** இச்சட்டம், 2009 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, பாஹியங்கல பாதுகாப்பு மற்றும் அபிவிருத்தி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப் பெயர்.

**2.** இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்தும் அதன் பின்னரும் (இதனகத்துப்பின்னர் "மன்றம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) "பாஹியங்கல பாதுகாப்பு மற்றும் அபிவிருத்தி மன்றத்தின் தற்போதைய உறுப்பினர்களாக உள்ளவர்களும் அத்துடன் இத்தால் அமைக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களாக இனிமேல் சேர்த்துக்கொள்ளப்படுபவர்களுமான அத்தகையோ ரான அத்தனை ஆட்களும் (இதனகத்துப்பின்னர் "கூட்டுத்தாப னம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) " பாஹியங்கல பாதுகாப்பு மற்றும் அபிவிருத்தி மன்றம்" என்ற பெயரின்கீழும் மகுடத்தின் பாஹியங்கல பாதுகாப்பு மற்றும் அபிவிருத்தி மன்றத்தைக் கூட்டிணைத்தல்.

கீழும் இடையறாவழியுரிமை கொண்ட ஒரு கூட்டிணைக்கப்பட்ட குழுவாக இருத்தல் வேண்டும். அத்துடன் அது அப்பெயர் கொண்டு வழக்குத் தொடுக்கலாமென்பதுடன் அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம். அத்துடன் பொது இலச்சினை யொன்றை வைத்திருக்கவும், பயன்படுத்தவும் விரும்பியாங்கு அதை மாற்றவும் அது முழுத்தத்துவமும் அதிகாரமும் கொண்டதாயிருத்தலும் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.*

**3**. கூட்டுத்தாபனம் அமைக்கப்படுவதற்கான பொதுக் குறிக் கோள்கள் பின்வருவனவாதல் வேண்டுமென இத்தால் வெளிப் படுத்தப்படுகின்றது :-

(அ) பாஹியங்கல புனித நகரத்திற்குட்பட்ட வரலாற்றுச் சின்னங்களையும் கலாசாரப் பொருட்களையும் பேணிக் காத்தல் ;

(ஆ) பாஹியங்கல புனித நகரின் வளாகத்திற்குட்பட்ட எல்லாக் கட்டிடங்களையும் மின்சார, நீர் வழங்கல் மற்றும் வேறு சுகாதார சேவைகளையும் மேம்படுத்து தலும் பேணுதலும் ;

(இ) பாஹியங்கல புனித நகரத்திற்குள் மேற்கொள்ளப்படும் மத, கல்விசார் மற்றும் ஆராய்ச்சி செயற்பாடுகளுக்கு அவசியமான உதவி வழங்குதல் ; அத்துடன்

(ஈ) இலங்கையிலும் வெளிநாட்டிலுமுள்ள ஏனைய பௌத்த ஒழுங்கமைப்புகளுடனும் மதசார் ஒழுங்கமைப்புக்களுட னும் நட்புறவுகளைப் பேணுதல்.

*கூட்டுத்தாபனத்தின் பொதுத் தத்துவங்கள்.*

**4**. கூட்டுத்தாபனமானது, இச்சட்டத்தினதும் எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கமைவாக, வங்கிக் கணக்குகளைத் திறத்தல், தொழிற்படுத்துதல் அத்துடன் மூடுதல், பிணைப்பொறுப்புடனோ பிணைப்பொறுப்பின்றியோ பணத் தைக் கடனாகப் பெறுதல் மற்றும் திரட்டுதல், உள்ளூர் அல்லது வெளிநாட்டு மூலவளங்களிலிருந்து மானியங்களையும் நன்கொடைகளையும் பெறுதல், அதன் நிதிகளை முதலீடு செய் தல், கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்குத்

தேவைப்படும் அலுவலர்கள் மற்றும் சேவையாளர்களை ஈடுபடுத்தல், தொழிலுக்கமர்த்தல் மற்றும் பதவியிலிருந்து நீக்குதல் என்பவற்றுக்கான தத்துவம் உட்பட, கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை அல்லது அவற்றுள் ஏதேனும் ஒன்றை ஊக்குவிப்பதற்கு அல்லது முன்னெடுத்துச் செல்வதற்கு அவசியமான அல்லது விரும்பத்தக்கவாறான அத்தகைய எல்லாச் செயல்களையும் கருமங்களையும் விடயங்களையும் செய்வதற்கான, புரிவதற்கான அத்துடன் நிறைவேற்றுவதற்கான தத்துவத்தை கொண்டதாதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.

**5.** (1) கூட்டுத்தாபனத்தின் அலுவல்கள் இச்சட்டத்தின் 6 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமைய தவிசாளர், துணைத்தவிசாளர், செயலாளர், உதவிச் செயலாளர், பொருளாளர் ஆகியோரைக் கொண்ட மற்றும் கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கிணங்கத் தெரிவு செய்யப்படும் வேறு இரண்டு உறுப்பினர்கள் நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையொன்றினால் (இதனகத்துப் பின்னர் "சபை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) நிருவகிக்கப்படுதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் முதலாவது சபை இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு உடன் முந்திய நாளன்று பதவி வகிக்கும் மன்றத்தின் நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையின் உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவில் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும் பாஹியங்கல தேவாலயத்தின் பிரதம குரு, சபையின் முதலாவது தவிசாளராதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் விதிகள்.

**6.** (1) பொதுக்கூட்டத்தில் சமுகமாயிருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களில் மூன்றிலிரண்டிற்குக் குறையாதோரின் வாக்குப் பெரும்பான்மை கொண்டு, பின்வரும் கருமங்கள் எல்லாவற்றுக்குமாக அல்லது கருமங்களுள் எவற்றுக்காகவும், இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அல்லது எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்திற்கு ஒவ்வாதனவாகவிராத விதிகளையாக்குதல் கூட்டுத்தாபனத்துக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும் :-

(அ) உறுப்பாண்மையை வகுப்பாக்கம் செய்தலும் உறுப்பினர்களைச் சேர்த்தல், மீளப்பெறுதலும் விலக்குதலும் ;

(ஆ) பதவிதாங்குநர்களைத் தெரிவு செய்தல், அவர்கள் பதவி துறத்தல், பதவியை வறிதாக்குதல், பதவியிலிருந்து நீக்கப்படுதல், அத்துடன் அவர்களது தத்துவங்கள் நடத்தை மற்றும் கடமைகள் ;

(இ) சபை உறுப்பினர்களைத் தெரிவுசெய்தலும் சபை உறுப்பினர்களின் தத்துவங்கள், கடமைகள் அத்துடன் பணிகள், அத்துடன் பதவிக்காலம் ;

(ஈ) கூட்டுத்தாபனத்தின் பல்வேறு அலுவலர்கள், முகவர்கள் மற்றும் சேவையாளர்கள் ஆகியோரின் தத்துவங்களும், கடமைகள் மற்றும் பணிகள் ;

(உ) சபையின் கூட்டங்களைக் கூட்டுவதில் அவதானிக்கப்படவேண்டிய நடைமுறை, அத்தகைய கூட்டங்களின் நேரம், இடம், அறிவித்தல்கள், நிகழ்ச்சிநிரல், அதற்கான கூட்ட நடப்பெண் மற்றும் அதில் அலுவல்கள் கொண்டுநடாத்தப்படுதல் ;

(ஊ) கூட்டுத்தாபனத்தின் ஆதனத்தை நிர்வகித்தலும், முகாமை செய்தலும் ; அத்துடன்

(எ) பொதுவில் கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.

(2) கூட்டுத்தாபனத்தால் ஆக்கப்பட்ட ஏதேனும் விதி (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்படக்கூடியவாறான விதியொன்றைப் போன்று அதே முறையில் திருத்தப்படலாம், மாற்றப்படலாம், அதற்கெதுவும் சேர்த்துக்கொள்ளப்படலாம் அல்லது இல்லாதொழிக்கப்படலாம்.

(3) கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்கள் எல்லா நேரங்களிலும் இச்சட்டத்தில் ஆக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமைந்தோராதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் நிதியம்.

**7.** (1) கூட்டுத்தாபனம் அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன் கூட்டுத்தாபனத்தின் பேரில் கொடைகள், நன்கொடைகள், மரண சாதன ஆதனவளிப்பு, ஒப்பப்பணங்கள், உதவுதொகைகள், கட்டணங்கள் அல்லது

மானியக்கொடைகள் என்ற வகையில் பெறப்பட்ட எல்லாப் பணங்களும் சபையால் தீர்மானிக்கவேண்டிய ஒரு வங்கியில் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வங்கிகளில் கூட்டுத்தாபனத்தின் வரவிற்கு வைப்பிலிடப்படுதல் வேண்டும்.

(2) இச்சட்டத்தின்கீழ் கூட்டுத்தாபனத்தின் தத்துவங்களையும் கடமைகளையும் பணிகளையும் பிரயோகிக்கையிலும் நிறைவேற்றுகையிலும் புரிகையிலும் கூட்டுத்தாபனத்தால் உறப்பட்ட எல்லா செலவுகளும் கூட்டுத்தாபனத்தின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

**8.** (1) கூட்டுத்தாபனத்தின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும். கணக்குகளும் கணக்காய்வும்.

(2) கூட்டுத்தாபனம் கூட்டுத்தாபனத்தின் வருமானம் மற்றும் செலவினங்கள், சொத்துக்கள், பொறுப்புக்கள் மற்றும் கூட்டுத்தாபனத்தின் வேறு எல்லாக் கொடுக்கல் வாங்கல்களையும் பற்றிய முறையான கணக்குப் புத்தகங்களை வைத்திருக்கச் செய்வித்தல் வேண்டும்.

(3) கூட்டுத்தாபனத்தின் கணக்குகள் தகைமைபெற்ற கணக்காய்வாளரால் கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டும்.

(4) இப்பிரிவில், “தகைமைபெற்ற கணக்காய்வாளர்” என்பது-

(i) இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் உறுப்பினராகவுள்ள அல்லது சட்டத்தால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் உறுப்பினரொருவராகவும், அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் கணக்காளர் ஒருவராகத் தொழில்புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டவராகவுள்ள தனியாள் ஒருவர் ; அல்லது

(ii) கணக்காளர் குழுமமொன்றில் வதியும் பங்காளர் ஒவ்வொருவரும் இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் உறுப்பினர் ஒருவராக அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவனத்தின் உறுப்பினரொருவராகவும், அத்தகைய நிறுவனத்தின்

பேரவையினால் கணக்காளர் ஒருவராகத் தொழில் புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டவராகவும் இருக்கின்றதான கணக்காளர் குழுமம் ஒன்று,

என்று பொருள்படும்.

*நிறுவனத்தினால் செலுத்தப் படவுள்ள தனிசுகளும் நிறுவகத்துக்குச் செலுத்தப் படவுள்ள தனிசுகளும்.*

**9**. இச்சட்டம் தொடங்குவதற்கு முந்திய நாளன்று நிறுவகத் துக்குள்ள எல்லாக் தனிசுகளும் பொறுப்புக்களும் இத்தால் அமைக்கப்படும் கூட்டுத்தாபனத்தினால் செலுத்தப்படுதல் வேண் டும். நிறுவகத்துக்குச் சேர்மதியாகவுள்ள எல்லாத் தனிசு செலுத் தப்படவுள்ள ஒப்பப்பணங்கள், உதவுதொகைகள் என்பன யாவும், இச்சட்டத்தின் நோக்கங்களுக்கென கூட்டுத்தாபனத்துக்குச் செலுத் தப்படுதலும் வேண்டும்.

*கூட்டுத்தாபனம் அசைவுள்ளதும் அசைவற்றதுமான ஆதனத்தை வைத்திருக்கலாம்.*

**10**. இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய, ஏதேனும் கொள்வனவு, மானியக்கொடை, கொடை, நன்கொடை, மரணசாதன ஆதன வளிப்பு என்ற வகையாக அல்லது வேறு வகையாக, அதற்குரித் தாக்கப்படும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனம் எதை யேனும் பெறவும் வைத்திருக்கவும் கூட்டுத்தாபனம் சட்டப்படி ஆற்றலும் தகுதியுமுடையதாதல் வேண்டும். அத்துடன் அத்தகைய ஆதனம் யாவும், இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகவும், 6 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கு அமையவும் விற்க, ஈடுவைக்க, குத்தகைக்கு கொடுக்க, கொடுத்து மாற்ற அல்லது வேறு வகையில் கையுதிர்க்கவுள்ள முழுத் தத்துவத்துடன் கூட்டுத்தாபனத்தினால் வைத்திருக்கப்படுதல் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் இலச்சினை.*

**11**. கூட்டுத்தாபனத்தின் இலச்சினை தவிசாளரினதும் செயலா ளரினதும் அல்லது பொருளாளரினதும் முன்னிலையிலன்றி எத்தகையதுமான சாதனம் எதிலும் பொறிக்கப்படுதலாகாது. அவர்கள் தாங்கள் சமுகமாயிருந்தமைக்கு அடையாளமாக அச்சாதனத்தில் தங்கள் பெயர்களை எழுதிக் கையொப்பமிடுதல் வேண்டும். அத்தகைய கையொப்பமிடுதல் சாட்சியொருவராக எவரேனுமாள் கையொப்பமிடுவதினின்று தனிவேறானதாதல் வேண்டும்.

**12**. கூட்டுத்தாபனம் கலைக்கப்படுவதன்மீது அதன் எல்லாத் தனிசுகளும் பொறுப்புக்களும் செலுத்தித் தீர்க்கப்பட்டதன் பின்னர் ஏதேனும் ஆதனம் எஞ்சியிருப்பின் அத்தகைய ஆதனம் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிக்கப் படுதலாகாது. ஆனால், கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை ஒத்தக் குறிக்கோள்களை உடையதும் அல்லது உடையனவும், ஏதேனும் வருமானத்தை அல்லது ஆதனத்தை அதன் அல்லது அவற்றின் உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிக்கப்படுவதினின்று அதன் அல்லது அவற்றின் விதிகளால் தடைசெய்யப்பட்டதும் அல்லது தடைசெய்யப்பட்டவையுமான ஏதேனும் வேறு நிறுவனத் திற்கு அல்லது நிறுவனங்களுக்குக் கொடுக்கப்படுதல் அல்லது மாற்றப்படுதல் வேண்டும். அத்தகைய நிறுவனம் அல்லது நிறுவ னங்கள், கூட்டுத்தாபனம் கலைக்கப்படுதன்மீது அல்லது அதற்கு முன்னர் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களால் தீர்மானிக்கப் படுதல் வேண்டும்.

*கூட்டுத்தாபனம் கலைக்கப் படுவதன் மீது எஞ்சியிருக்கும் ஆதனம்.*

**13**. இச்சட்டத்தில் அடங்கியுள்ளதெதுவும் குடியரசின் உரிமை களையேனும், ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவின் உரிமைகளையேனும், பங்கப்படுத்துதலோ அல்லது பாதித்தலோ ஆகாது.

*குடியரசினதும் ஏனையோரினதும் உரிமைகளைப் பேணுதல்.*

**14**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல்.*

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்*